

# சபைகளுக்கு

## கர்த்தர் உரைத்த வார்த்தைகள்

கர்த்தர் சபைகளைக் குறித்து வெளிப்படுத்திச் சொன்ன காரியங்கள் இந்தக் கைப்பிரதியில் தரப்பட்டிருக்கிறது. இப்போதே சபைகளைக் குறிவைத்துப் புறப்படும் உபத்திரவங்கள் தீவிரமாக எழும்பியிருக்க இனி வருகிற நாட்களில் இனியும் தீவிரமாக இவைகள் பரவும் என்பதாக கர்த்தர் வெளிப்படுத்திக் காண்பித்திருப்பதோடு, இதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் வெளிப்படுத்திக் காண்பித்திருக்கிறார். மிகத் துரிதமாக நாம் செயல்படக் கருதியே உங்கள் பாரம் நிறைந்த ஜெபத்திற்காக இந்தக் கைப்பிரதி வெளியிடப்பட்டிருக்கிறது. திறப்பில் நின்று ஜெபியுங்கள். ஜெயம் நிச்சயம்.

இந்த தீர்க்கதரிசன வார்த்தைகள் 02.09.2019 ல் கர்த்தர் சகோ. வின்சென்ட் செல்வகுமார் அவர்களுக்கு வெளிப்படுத்திச் சொன்னது.

2019ம் வருடம் ஒன்பதாவது மாதம் இரண்டாம் நாளிலே சென்னையில் கர்த்தருடைய ஜனங்கள் நடுவில் நான் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, கர்த்தர் சபைகளையும், தம் ஊழியர்களையும் குறித்துப் பேசி : இதோ, உன் தேசத்தில் ஒரு கொடிய காலம் சபைகள் மேலும், என் நாமத்தைக் கொண்டிருக்கிற என் ஜனங்களின் மேலும் தீவிரித்து வருகிறது. அந்நாட்களில் அநேகர் செயல்பட முடியாதபடி கைகள் கட்டப்படுகிறதையும், அநேகருடைய சொத்துக்களும், சேகரித்து வைத்த ஆஸ்திகளும், நிலங்களும் அபகரிக்கப்படுவதையும், பலர் மேல் குற்றங்கள் சுமத்தப்படுகிறதையும், சில சபைகள் சிதறடிக்கப்படுகிறதையும், அநேகம் இடங்களில் மந்தைகள் பின்வாங்கிப் போகிறதையும் பார்க்கப் போகிறீர்கள்.

சபைகளில் சில உடைக்கப்படவும், அதில் ஊழியங்களுக்கு கைலாகு கொடுத்தவர்களும், சபையில் பிரதானமாக அமர்ந்திருந்தவர்களில் சிலர் பிரிந்து போகவும், சில சபைகள் உடைக்கப்படவும், சில சபைகளின் அஸ்திபாரங்கள் அசைக்கப்படவும் காலம் வருகிறது. தீமையானது வருகிறது. அது உன் தேசத்தில் என் ஜனங்கள் நடுவிலும் வருகிறது. இதற்காக நீ முந்தி செய்ய வேண்டியதாவது: சபையின் அஸ்திபாரத்தை உறுதியுள்ளதாக்கி அதின் அலங்கத்தைக் காத்துக் கொள். உன் ஜனத்தை என் சத்தியத்தினால் உறுதிப்படுத்தி உன் மந்தையைக் காத்துக் கொள். தீமையானது பலங்கொள்ளுகிறதற்கு முன்பும், தீமையானது சமயம் பெற்றுப் புறப்படுகிறதற்கு முன்பும், தீமையானவர்களுடைய கால்கள் உங்கள் நடுவில் பிரவேசிப்பதற்கு முன்பும் நீங்கள் எழும்பி, வெளிச்சத்தை உங்கள் நடுவில் விளையப் பண்ணுங்கள். வெளிச்சமானது இன்னதென்று உங்கள் ஜனங்களுக்குக் கற்பியுங்கள். அந்த வெளிச்சத்தினால் உங்களை மூடிக் கொண்டு உங்களைச் சுற்றிலும் இறங்குகிற இருளைத் துரத்தினால் நீங்கள் இருளினால் வெல்லப்படாமல் ஒளியினால் இருளை வென்றிருப்பீர்கள். அப்போது நான் இருளினால் அதிகாரம் பெற்றிருக்கிறவர்கள் நடுவில் ஒருவர் பட்டயத்தை ஒருவருக்கு விரோதமாகத் திருப்பி, உன்னை நோக்கி வந்தவர்களை திசை திரும்பிப் போகப் பண்ணுவேன். அவர்களுடைய மூக்கிலே துறட்டைப் போட்டு நான் அவர்களைத் திருப்புவேன். உங்கள் நடுவில் தீமையைச் செய்ய நினைத்தவர்கள் அதை விடப் பெரிய தீமைகள் தங்களை நோக்கித் திரும்புகிறதைக் கண்டு உங்களை விட்டு வேறு திசைகளில் திரும்புவார்கள். ஆனாலும், நான் சொல்லுகிறதை நீங்கள் நிறைவேற்றினால் ஒழிய இது நடக்காது.

அது உங்கள் கைகளிலிருக்கிறது. தீமையும், நன்மையும் உனக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. வெளிச்சத்தை உங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள் இருக்கிற நசல் கொண்ட காரியங்களைச் சீழ் பிதுக்கி அதின் இரணத்துக்கு காயங்கட்டுங்கள். உங்கள் மந்தையை பலப்படுத்துங்கள், அதின் நடுவில் வெளிச்சத்தை விதையுங்கள். அப்போது உங்கள் தீபம் அணையாமலும், உங்கள் ஒளி குறையாமலும். இருளானதும் உங்களைப் பற்றிக் கொள்ளாதிருக்கும்.

உலகத்தில் வந்து எந்த மனிதரையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியை ஜனங்களுடைய இருதயத்தில் ஆழமாய் விதையுங்கள். அப்பொழுது உங்கள் தேசத்தில் இதோ, கங்கணம் கட்டிக் கொண்டு வந்த சவுல்கள் பவுல்களாக மாறுகிறதையும், உங்களுக்கு விரோதமாக எழும்பி வரும் பொல்லாதவர்கள் தங்கள் நினைவுகளை விட்டு திரும்பிப் போகிறதையும் பார்ப்பீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பின்பும் கர்த்தர் பேசி: உங்களுக்கு தீமை செய்ய வேண்டுமென்று அவர்கள் கொண்டிருக்கிற நினைவைக் காட்டிலும், அவர்களுக்கு விரோதமாய் எழும்பி வருகிற தீமை பெரிதாய் இருக்கிறதைக் கண்டு பயந்து அவர்கள் தங்கள் வழிகளை விட்டு விலகுவார்கள். உங்களைக் குறித்து அவர்கள் வைத்திருக்கிற தீமையான நினைவுகளை அவர்கள் உங்கள் மேல் நிறைவேற்றக்கூடாதபடி நான் அவர்களுடைய கால்களை திருப்புவேன். கைகளைப் பலட்சயமாக்குவேன்.

சபையே எழும்பு: நான் உங்களுக்குத் தந்த இந்த வார்த்தைகளை தீவிரமாய் சபைகளுக்குள்ளே கொண்டு போய், என் ஜனங்களின் காதுகள் கேட்க இதைச் சொல்லுங்கள். இதை கேட்கிற எவனும் உணர்வுள்ளவனாய் எனக்கென்று உத்திரவாதம் செய்து எழும்பினால் உன் தேசத்தின் நடுவில் உங்கள் எல்லைகள் சேதப்படாமல் பாதுகாக்கப்பட்டிருக்கும். நீங்கள் இதைக்குறித்து இன்னும் பாரப்படாமல் நிர்விசாரமாயிருப்பீர்களானால் நான் மேலே உங்களுக்குச் சொன்ன தீமைகள் யாவும் சடுதியில் வந்து உங்கள் மேல் நிறைவேறுகிறதைக் காண்பீர்கள். அப்போது என் ஊழியர்கள் செய்த கிரியைகளில் அநேகமானவைகள் மண்ணோடு மண்ணாக்கப்பட்டு, அநேகம் சபைகள் பாழாக்கிவிடப்பட்டு, அதில் அநேகம் அந்நியர் கைவசமாகி, அவர்களில் அநேகர் தங்கள் வாழ்வாதாரங்கயைும் இழந்து, சிலருடைய ஊழியங்கள் மண்மூடிப் போகிறதையும் காண்பீர்கள். அன்றியும், மந்தையிலிருக்கிறவர்களில் அநேகர் தங்களைச் சூழ நடக்கிற பயங்கரங்களைக் காண்கிறதினால் திசைமாறி தாங்கள் விட்டு வந்த பழைய வாழ்க்கைக்கே திரும்புவார்கள். அவர்களில் அநேகர் பயமுறுத்தல்களைக் கண்டு பயந்து காட்டிக் கொடுப்பார்கள்.

வஞ்சகத்திற்கும், தீமைக்கும், தீமையான கிரியைகளுக்கும், களியாட்டங்களுக்கும் இதோ, காம விகாரங்களுக்கும், அசுத்தத்திற்கும், மாம்சத்தின் கிரியைகளுக்கும் என் சபைகளுக்குள்ளே இடம் கொடுத்து, என் ஜனங்களை தீட்டுப்படப் பண்ணி மோவாபியரின் அருவருப்புகளை செய்யும்படி அவர்களை பலவந்தம் பண்ணி, அவர்களை தந்திரத்தினாலே பிடித்து சபைகளை வஞ்சித்தவர்கள் மனந்திரும்பக்கடவர்கள்.

சபையே.. உன் பூர்வ நிலைக்கு திரும்ப வா. என்னிடத்தில் உனக்கு சகாயம் உண்டு என்று மறுபடியும் உனக்குச் சொல்லுகிறேன். இல்லாத பட்சத்தில், ஒன்றையும் நீ இழக்கக் கொடுத்து தீருமளவும் என் கோபாக்கினையின் பாத்திரம் உன்னை விட்டு விலகாதிருக்கும் என்றார்.


**PROPHETIC PROPAGATORS MISSION**

RAMANATHAPURAM 9788404222

propagators@vojmedia.com

BANGALORE 8095772333